பக்கங்கள்: 11 விலை : 30/-

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 06 வள்ளுவர் ஆண்டு 2052 ஐப்பசி 22 திங்கட்கிழமை 08.11.2021 கதிர் 03

## இது ரகசியம் அல்ல!

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டத்தை விரைந்து கூட்டுவதற்கான முன்னெடுப்பில் - முனைப்பில் - கட்சியின் பதில் பொதுச் செயலாளர் டாக்டர் சத்தியலிங்கம் தீவிரமாக உள்ளார். ☞ 2

# ஒட்டுமொத்த அரசையும் விரட்டியடிக்க வேண்டும்

## மனோ எம்.பி. முழக்கம்



விவசாயத்துறை அமைச்சரின் கொடும்பாவியை மட்டுமல்ல ஒட்டுமொத்த அரசையும் கொளுத்தி, வீட்டுக்கு விரட்டியடிக்க வேண்டும்.

- இவ்வாறு தமிழ் முற்போக்குக் ☞ 2



## சிவயோகன் காலமானார்!

(ந.லோகதயாளன்)

வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் வேலுப்பிள்ளை சிவயோகன் நேற்றுக் காலமானார்.

துன்னாலை மத்தி, கரவெட்டியைச் சேர்ந்த இவர், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் உடுப்பிட்டி கிளையின் செயலாளராவார்.

இறுதிக்கிரியைகள் இன்று காலை 10.30 மணியளவில் துன்னாலை கோவிற் கடவையில் உள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெறவுள்ளன.



## கோட்டா அரசு வீழ்வது உறுதி

### இராதா எம்.பி. திட்டவட்டம்

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான இந்த அரசு வீழ்வது நிச்சயம். அடுத்த தேர்தலில் சிறப்பானதொரு அரசை ஆட்சிக்குக் கொண்டு வருவதற்கு நாட்டு மக்கள் அணிதிரள வேண்டும். ☞ 2



## சஜித் தலைமையில் மக்கள் ஆட்சி மலரும்

### திகா எம்.பி. சூளுரை

மக்கள் எழுச்சி மூலமே இந்த அரசை விரட்டியடிக்க முடியும். சஜித் பிரேமதாஸ தலைமையில் மக்களுக்கான தொரு அரசு உருவாகும்.

- இவ்வாறு தொழிலாளர் தேசிய சங்கத்தின் தலைவரும் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரு ☞ 2

## வலயக் கல்வித் திணைக்களங்கள் முன்பாக நாளை பெரும் போராட்டம்

### இலங்கை ஆசிரியர் சங்கம் அறிவிப்பு



(ந.லோகதயாளன்)

அதிபர் - ஆசிரியர்களின் தொழிற்சங்கப் போராட்டம் நாளை சகல வலயக் கல்வித் திணைக்களங்களின் முன்பாகவும் நடைபெறவுள்ளன. ☞ 10

## இளம் குடும்பஸ்தர் ரயில் மோதி சாவு!



திருகோணமலை மாவட்டம், தம்பலகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட முள்ளிப்பொத்தானைப் பகுதியில் நேற்று மாலை இடம்பெற்ற ரயில் விபத்தில் இளம் குடும்பஸ்தர் ஒருவர் சம்பவ இடத்திலேயே பலியாகியுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். ☞ 10

## நேற்று தொற்று 626

இலங்கையில் நேற்று 626 பேர் கொரோனா வைரஸ் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர். ☞ 2


## திடீர் வேலைநிறுத்தப் போராட்டதில் ஈடுபட மின்சார சபை தொழிற்சங்கங்கள் திட்டம்!

திடீர் வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடத் தயாராகி வருவதாக இலங்கை மின்சார சபையின் தொழிற்சங்கங்கள் தெரிவித்துள்ளன.

கெரவலப்பிட்டி மின் உற்பத்தி நிலையத்தின் அரசுக்குச் சொந்தமான பங்குகளை அமெரிக்க நிறுவனத்துக்கு வழங்கும் தீர்மானத்துக்கு எதிராகவே இந்த வேலைநிறுத்தப் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

கடந்த புதன்கிழமை கொழும்பில் ஆர்ப்பாட்டத்தை நடத்திய மின்சார சபை தொழிற்சங்கப் பிரதிநிதிகள் வேலைநிறுத்தம் தொடர்பில் எச்சரிக்கை விடுத்திருந்தனர். ☞ 10

## பெருந்தொகை கஞ்சா, பணத்துடன் 8 பேரைக் கைதுசெய்தது எஸ்.ரி.எவ்.



கெசல்வத்தையில் பொலிஸாரும் விசேட அதிரடிப் படையினரும் நேற்று இணைந்து மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போது பெருந்தொகை கஞ்சா மற்றும் 7 லட்சத்து 90 ஆயிரம் ரூபா பணம் ஆகியவற்றுடன் 8 சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர். ☞ 2

## மேலும் 15 பேர் மரணம்

நாட்டில் மேலும் 15 பேர் கொரோனா வைரஸ் தொற்றால் மரணித்துள்ளனர்.

அவர்களில் 7 ஆண்களும், 5 பெண்களும் அடங்குகின்றனர்.

அதற்கமைய 30 வயதுக்கும் 59 வயதுக்கும் இடைப் ☞ 2

## இனி இது .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கட்சியின் மத்திய குழு உறுப்பினர்களின் எண்ணிக்கை (தலைவர் தமது தற்றுணிவில் அழைக்கும் உறுப்பினர்களின் எண்ணிக்கையையும் சேர்த்து) அறுபதுக்கும் மேற்படாது என்று கருதப்படுவதால் இந்தக் கூட்டத்தை வவுனியாவில் அல்லது வேறிடத்தில் கூட்டுவதில் சுகாதார நடைமுறைச் சிக்கல்கள் இருக்கா என்று கூறப்படுகின்றது. பரந்த, விசாலமான மண்டபத்தில் – தூரத் தூர இருக்கைகள் அமைத்து – 150 பேர் வரை கூட ஒன்றுகூட முடியும்என்பதுதான் இன்றையகட்டுப்பாட்டு நிலைமை. இந்த விதிமுறை எப்போது மாறும், எப்போது அனுமதிக்கப்படும் ஆள்களின் எண்ணிக்கை சுருங்கும் என்பவை எல்லாம் முற்கூட்டியே தெரியாது. ஆகையால் வாய்ப்பு இருக்கும் இந்தச் சமயத்தில் – இயன்ற விரைவில் – இலங்கை தமிழரசுக்கட்சியின் மத்திய குழுக்கூட்டத்தை நடத்தி முடிக்கத் துடியாய்த் துடிக்கிறார் சத்தியலிங்கம்.

எதிர்வரும் 14ஆம் திகதி கூட்டத்தைக் கூட்டலாம் என்பது அவர் எண்ணம். ஆனால் அந்த நாளில் கல்யாண நிகழ்வுகள் அதிகம் இருப்பதால் பரந்த மண்டபத்தை பெற முடியாமல் அவர் தடுமாறுகிறார் என்று தெரிகிறது. அத்தினத்தில் அக்கூட்டத்தை நடத்துவதில் இன்னொரு சிக்கலும் உண்டு. கட்சியின் சிரேஷ்ட துணை செயலாளர்களில் ஒருவரும், பேச்சாளரும், யாழ் மாவட்ட எம்.பியுமான எம்.ஏ.சுமந்திரன் அன்றுதான் அமெரிக்கா புறப்படுகிறார். அடுத்த நாள் வொஷிங்டன் டி.ஸியில் அவர் அமெரிக்க அதிகாரிகளோடு பேச்சுக்களில் ஈடுபடவுள்ளார்.

வரும் 14ஆம் திகதி மத்திய செயற்குழுவை கூட்டினால் அத்தினத்தில் சுமந்திரன் இருக்கமாட்டார், கூட்டத்தில் பங்குபற்றமாட்டார் என்பது உறுதியானது. சுமந்திரன் இல்லாமல் இந்தக் கூட்டத்தை நடத்துவதில் கட்சித் தலைவர் மாவை சேனாதிராஜாவிற்கு விருப்பமில்லை எனத் தெரிகிறது. இருவருக்குமிடையில் அண்மைக் காலமாக நீடித்த புரிந்துணர்வின்மை களையப்பட்டு, இணக்க நிலை ஏற்பட்டிருப்பதாக மிக நம்பகமாகத் தெரிய வருகிறது.

அடுத்து நடைபெறக்கூடிய கட்சியின் மத்திய குழுக் கூட்டத்தில் தமிழரசுக் கட்சியின் அடுத்த மாநில மாநாடு பற்றியும் தீர்மானிக்கப்படும் எனத் தெரிகிறது. விரைவில் நடைபெறக்கூடிய கட்சியின் தேசிய மாநாட்டை ஒட்டி பல அதிரடி மாற்றங்கள் கட்டவிழும் சூழலும் தென்படுகின்றன. கட்சித் தலைவராக இருக்கும் மாவை சேனாதிராஜாவிற்கு உரிய கௌரவம், அந்தஸ்து, பதவி நிலை வழங்கும் ஏற்பாட்டுக்கு பல தரப்பினரும் இணங்கி இருக்கின்றனர் எனவும் பேசப்படுகிறது.

விடயம் மலிந்தால் விவகாரம் சந்திக்கு வரும்தானே...! அப்போது அறிந்து கொள்வோம்...!

✦ ✦ ✦

'தனக்குத் தனக்கு என்றால் சுளகு படக்கு, படக்கு என்று அடிக்குமாம்' என்பார்கள். இதற்கு யாரும் விதிவிலக்கல்ல போலும். அது பற்றிய தகவல் இது.

ஒக்ரோபர் மாதம் 13ஆம் திகதி பருத்தித்துறை கடற்பரப்பில் இரு படகுகளில் வந்த 23 இந்திய மீனவர்கள் சிறை பிடிக்கப்பட்டமை தெரிந்த விடயம்.

இவ்வாறு சிறை பிடிக்கப்பட்டவர்கள் விடயத்தில் பிரதமரின் இணைப்புச் செயலாளர் செந்தில் தொண்டமான் அதிக கரிசனை செலுத்துகின்றமை அவதானிக்கப்பட்டுள்ள விடயம்.

இவ்விவகாரம் தொடர்பில் கொழும்பில் பல முயற்சிகளை அவர் மேற்கொண்டார் என்று தெரிகின்றது. இதன் பின்பு நேற்று முன்தினம் சனிக்கிழமை யாழ்ப்பாணம் வந்து, யாழ் சிறையில் அடைக்கப்பட்டுள்ள 23 இந்திய மீனவர்களையும் அவர் பார்வையிட்டார். ஏன் இம்முறை மட்டும் அவர் இவ்வளவு கரிசனை எனத் தேடியபோது சில விடயங்கள் வெளி வந்தன.

இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்ட 23 இந்திய மீனவர்களும் நாகை மாவட்டம் என்பதனால் அதனை வைத்தே தேடியபோது செந்தில் தொண்டமானின் சித்தியார் – அதாவது செந்தில் தொண்டமானின் தாயாரின் உடன் பிறந்த சகோதரியும், ஆறுமுகம் தொண்டமானின் உடன் பிறந்த சகோதரியுமான ஒருவர் இந்தியாவின் நாகைபட்டிணத்திலேயே திருமணம் செய்தவர் என்பது தெரிய வந்தது.

அவ்வாறு சித்தி திருமணம் செய்த சித்தப்பாவின் சகோதர வழி நட்புக்களின் பிள்ளைகள் இருவர் இந்த 23 பேரில் உள்ளடக்கம் எனத் தெரிவிக்கப்படுகின்றது. அதனால்தான் இந்தளவு கரிசனை.

கடந்த ஒக்ரோபர் 14 ஆம் திகதி கைது செய்யப்பட்ட இந்த 23 பேரும், முதலில் 14 நாள்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டனர். பின்பு 28 ஆம் திகதிய தவணைக்கு அந்த 23 பேர் சார்பிலும் இந்தியத் தூதரகம் சுஜீபன் மற்றும் குகதாஸ் ஆகிய இரு சட்டத்தரணிகளையும் ஏற்பாடு செய்திருந்தது. ஆனால் செந்தில் தொண்டமான் சட்டத்தரணி ஜோய் மகிழ் மகாதேவாவை மேலதிகமாக ஏற்பாடு செய்திருந்தார்.

சோழியன் குடுமி சும்மா ஆடாது என்பது உண்மைதான்!

இதேநேரம் இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ள 23 இந்திய மீனவர்களில் ஒருவர் தமிழகம் மண்டபம் அகதி முகாமில் தங்கியிருக்கும் திருகோணமலையைச் சேர்ந்தவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

**- மின்னல் -**

## ஒட்டுமொத்த .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கூட்டணியின் தலைவரும் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் தெரிவித்தார்.

அத்தியாவசியப் பொருள்களின் விலையேற்றத்தைக் கண்டித்தும், வரவு – செலவுத் திட்டம் ஊடாக மக்களுக்கு நிவாரணம் வழங்குமாறு வலியுறுத்தியும் பொகவந்தலாவையில் நேற்று தமிழ் முற்போக்குக் கூட்டணியின் ஏற்பாட்டில் ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே மனோ கணேசன் எம்.பி. மேற்கண்டவாறு கூறினார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:–

கொரோனாவுக்கு மத்தியிலும் இந்தியா, பங்களாதேஷ் போன்ற நாடுகள் இலங்கைக்குக் கடன் கொடுத்தன. அந்த நாடுகள் பொருளாதாரத்தை முகாமை செய்யவில்லையா? அப்படியானால் எமது நாட்டு அரசுக்கு மட்டும் ஏன் தடுமாற்றம்?

தேசிய உற்பத்தியில் புரட்சி செய்யப் போவதாக அறிவித்துவிட்டு மஞ்சளுக்குத் தடை விதிக்கப்பட்டது. நாட்டில் தற்போது மஞ்சள் இருக்கின்றதா? பயறு, உளுந்து உள்ளிட்ட பொருள்களும் இல்லை. இந்த விடயத்தில் அரசு தோல்வி கண்டுள்ளது – என்றார்.

## பெருந்தொகை .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

75.5 கிலோகிராம் கேரள கஞ்சாவுடன் 3 சந்தேகநபர்களும், 3 கிராம் ஹெரோயின் மற்றும் 6 கிராம் மெத்தம்பெட்டமைன் போதைப்பொருளுடன் மேலும் 5 சந்தேகநபர்களும் கைதுசெய்யப்பட்டனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

மேலும், சந்தேகநபர் ஒருவரிடமிருந்து 7 இலட்சத்து 90 ஆயிரம் ரூபா பணமும் கைப்பற்றப்பட்டுள்ளது.

கொழும்பு – 12, கொழும்பு – 15 ஆகிய பகுதிகளில் வசிக்கும் 18 வயதுக்கும் 48 வயதுக்கும் இடைப்பட்ட சந்தேகநபர்கள் 8 பேரும் நீதிமன்றத்தில் இன்று ஆஜர்படுத்தப்படவுள்ளனர் என்று பொலிஸார் மேலும் குறிப்பிட்டனர்.

## மேலும் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பட்ட ஆண் ஒருவரும், இரண்டு பெண்களுமாக 3 பேர் உயிரிழந்துள்ளனர்.

அதேவேளை, 60 வயதுக்கு மேற்பட்ட 12 பேரின் மரணங்கள் பதிவாகியுள்ளன.

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தால் நேற்றுமுன்தினம் இந்த மரணங்கள் உறுதிப்படுத்தப்பட்டுள்ளன என்று அரச தகவல் திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி நாட்டில் இதுவரையில் கொரோனாத் தொற்றால் சாவடைந்தோரின் மொத்த எண்ணிக்கை 13 ஆயிரத்து 856 ஆக அதிகரித்துள்ளது.

## நேற்று தொற்று .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதற்கமைய நாட்டில் இதுவரை அடையாளம் காணப்பட்ட கொரோனாத் தொற்றாளர்களின் மொத்த எண்ணிக்கை 5 லட்சத்து 45 ஆயிரத்து 256 ஆக எகிறியுள்ளது.

அத்துடன் கொரோனாத் தொற்றிலிருந்து மேலும் 271 பேர் நேற்று குணமடைந்துள்ளனர்.

அதன்படி நாட்டில் இதுவரை கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 5 லட்சத்து 15 ஆயிரத்து 183 ஆக அதிகரித்துள்ளது.

## சஜித் தலைமையில் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மான பழனி திகாம்பரம் தெரிவித்தார்.

அத்தியாவசியப் பொருள்களின் விலையேற்றத்தைக் கண்டித்தும், பட்ஜட் ஊடாக மக்களுக்கு நிவாரணம் வழங்குமாறு வலியுறுத்தியும் பொகவந்தலாவையில் நேற்று நடைபெற்ற போராட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:–

பொய்யுரைத்து அதன் மூலம் ஆட்சியை முன்னெடுப்பதற்கே இந்த அரசு முயற்சிக்கின்றது. இன்று பொய் கூறுவதில் சிறப்புத் தேர்ச்சியும் பெற்றுள்ளது.

நாட்டு மக்களுக்குத் தாங்கிக்கொள்ள முடியாத வகையில் அத்தியாவசியப் பொருள்களின் விலைகள் அதிகரிக்கப்பட்டுள்ளன. இதனால்தான் மக்கள் வீதியில் இறங்கிப் போராடுகின்றனர். மக்கள் போராட்டங்கள் மூலமே இந்த அரசை விரட்டியடிக்க முடியும். சஜித் தலைமையில் மக்களுக்கு நன்மை பயக்கும் அரசொன்றை நாம் உருவாக்குவோம்.

சேதன பசளைத் திட்டத்தை ஒரே நாளில் செயற்படுத்திவிட முடியாது. அதற்கு நீண்டகாலத் திட்டம் வேண்டும். ஒரே தடவையில் செய்வதற்கு முற்பட்டதால்தான் இன்று விவசாயிகள் போராடுகின்றனர். இதனால் உணவுத் தட்டுப்பாடு ஏற்படும் அபாயம் உள்ளது. எனவே, விவசாயிகளுக்கு உடனடியாக உரத்தைப் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் – என்றார்.

## கோட்டா அரசு .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

– இவ்வாறு மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான வே. இராதாகிருஷ்ணன் அறைகூவல் விடுத்துள்ளார்.

அத்தியாவசியப் பொருள்களின் விலையேற்றத்தைக் கண்டித்தும், பட்ஜட் ஊடாக மக்களுக்கு நிவாரணம் வழங்குமாறு வலியுறுத்தியும் பொகவந்தலாவையில் நேற்று நடைபெற்ற போராட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

மலையகப் பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு அதிகரிக்கப்பட்டதாகக் கூறப்படும் சம்பளம் இன்னும் முறையாக – முழுமையாகக் கிடைக்கவில்லை. சம்பளப் பிரச்சினை ஒருபுறம், மறுபுறத்தில் விலையேற்றம் என்ற தாங்க முடியாத சுமை.

சமையல் எரிவாயு, பால் மா மற்றும் இதர அத்தியாவசியப் பொருள்களின் விலைகள் நாளாந்தம் அதிகரித்து வருகின்றன. இதனால் வாழ்க்கைச் சுமையும் அதிகரித்துள்ளது.

ஆசிரியர்கள், மின்சார சபை ஊழியர்கள், துறைமுக ஊழியர்கள் என அனைவரும் இன்று வீதிக்கு இறங்கிவிட்டனர். யார் வேண்டுமானாலும் எப்படியும் பொருள்களை விற்கலாம் என்ற நிலைமை உருவாகியுள்ளது. எது எப்படி இருந்தாலும் இந்த ஆட்சி வீழ்வது உறுதி. நல்லதொரு அரசை உருவாக்க மக்கள் அடுத்த தேர்தலுக்குத் தயாராக வேண்டும் – என்றார்.



# ஒரு நாள் அடையாள வேலை நிறுத்தத்துக்கு பட்டதாரி உத்தியோகத்தர் சங்கமும் ஆதரவு

(சாவகச்சேரி நிருபர்)

நாடளாவிய ரீதியாக அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவைச் சங்கம் மற்றும் பணிக்கு அமர்த்தப்பட்ட பட்டதாரிகள் சங்கம் ஆகியவற்றால் இன்று (திங்கட்கிழமை) பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து முன்னெடுக்கவிருக்கும் ஒரு நாள் அடையாள வேலை நிறுத்தத்துக்கு வடக்கு மாகாண அரசாங்க சேவை பட்டதாரி உத்தியோகத்தர்கள் சங்கம் முழு ஆதரவை வழங்குவதாக அறிவித்துள்ளது.

இது தொடர்பாக வடக்கு மாகாண அரசாங்க சேவைப் பட்டதாரிகள் சங்கம் ஊடகங்களுக்கு அனுப்பி வைத்துள்ள அறிக்கையில் -

மத்திய மற்றும் மாகாண அரச சேவையில் பட்டதாரி அலுவலர்கள் மற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு அரச சேவையில் இதுவரை கிடைக்காத உரிமைகளையும், நியாயமான கோரிக்கைகளையும் ஒன்றிணைந்து பெற்றுக்கொள்ளும் நோக்கில் - (சம்பள முரண்பாடுகளை நீக்குதல், பொருத்தமான பதவி உயர்வு நடைமுறைகளை (எம்.என்.-5, எம்.என். - 7 தரத்தில்) வழங்கல், திறமை மற்றும் தராதரத்துக்கு ஏற்றவாறு கடமைகளை வழங்குதல், அனைத்துப் பட்டதாரி பயிலுநர் அலுவலர்களுக்கும் உடனடியாக நிரந்தர நியமனம் வழங்கல்) போன்ற கோரிக்கைகளை முன் வைத்து நாடளாவிய ரீதியாக அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவை சங்கம் மற்றும் பணிக்கு அமர்த்தப்பட்ட பட்டதாரிகள் சங்கம் ஆகியவற்றால் முன்னெடுக்கவிருக்கும் ஒரு நாள் அடையாள வேலை நிறுத்தத்துக்கு வடக்கு மாகாண அரசாங்க பட்டதாரி உத்தியோகத்தர் சங்கமாகிய நாம் எமது முழு ஆதரவையும் நல்கிக் கொள்கிறோம்.

இன்று வடக்கு மாகாணத்தில் கடமையாற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர்களாகிய நாம் அனைவரும் ஒன்றுபட்டு சுகவீன விடுப்புடன் கூடிய ஒருநாள் அடையாள வேலை நிறுத்தத்துக்கு எமது பேராதரவை வழங்கிக் கொள்வோம். - என ஊடக அறிக்கையில் தெரிவித்துள்ளனர்.

## கிணற்றில் மூழ்கி மாணவன் சாவு!

*சுழிபுரம் - திக்கரை பகுதியில் உள்ள கிணறு ஒன்றில் நீராடச் சென்ற பாடசாலை மாணவன் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார்.*

*வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவிற்கு உட்பட்ட மூளாய் பகுதியில் வசிக்கும் மாணவன் தனது நண்பர்களுடன் பாடசாலையில் சிரமதானம் செய்யப்போகிறேன் எனக் கூறி விட்டு, சுழிபுரம் - திக்கரை பகுதியில் உள்ள கிணறு ஒன்றில் நீராடச் சென்றுள்ளார்.*

*இந்தநிலையில் அவர் நீராடிக்கொண்டிருக்கும்போது திடீரென நீரில் மூழ்கியுள்ளார். இதனை அவதானித்த அவரது நண்பர்கள் அயலில் உள்ளவர்களை அழைத்து அவரைக் காப்பாற்றி மூளாய் வைத்தியசாலைக்கு கொண்டு சென்றனர்.*

*அதன்பின்னர், மேலதிக சிகிச்சைக்காக மூளாய் வைத்தியசாலையில் இருந்து யாழ். போதனா வைத்தியசாலைக்கு குறித்த இளைஞனை அழைத்துச் செல்லும்போது அவர் உயிரிழந்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.*

*மூளாய் பகுதியைச் சேர்ந்த பிரபாகரன் ரஜீவன் என்ற 18 வயது மாணவனே இவ்வாறு உயிரிழந்துள்ளார். மாணவனின் சடலம் தற்போது பிரேத பரிசோதனைகளுக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ள நிலையில், சம்பவம் தொடர்பாக பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.*

## முல்லைத்தீவு நகர லயன்ஸ் கழகத்துக்கு லயன் ரெங்கநாதனால் மூக்குக் கண்ணாடிகள்







யாழ்ப்பாண நகரம் லயன்ஸ் கழகத்தால் முல்லைத்தீவு நகர லயன்ஸ் கழகம் உருவாக்கப்பட்டு அதன் அங்குரார்ப்பணமும் புதிய உறுப்பினர் பதவியேற்பும் கடந்த சனிக்கிழமை மாலை முல்லைத்தீவில் ஆளுநர் சபையின் பிரதிப் பொருளாளரும் யாழ். இந்து மகளிர் கல்லூரி பிரதி அதிபரும் ஈ.- சிற்றி ஆங்கிலக் கல்லூரி நிர்வாக இயக்குநருமாகிய லயன் ரஜீவன் ஜெயச்சந்திரமூர்த்தி மற்றும் யாழ்ப்பாணம் நகர லயன்ஸ் கழகத் தலைவர் லயன் கே.றெனி கஜன் ஆகியோர் இணைத் தலைமையில் நடைபெற்றது.

யுத்தத்தால் மிகவும் பாதிக்கப்பட்ட முல்லைத்தீவு பிரதேசத்தில் அந்தப் பிரதேச மக்களுக்கு அங்கிருந்து சேவையாற்றவேண்டும் என்ற பெருவிருப்போடு லயன்ஸ் கழகம் மாவட்டம் 301 பி1 இன் ஆளுநர் லயன் ஆர்.எல்.ராஜ்குமார் தனது ஆளுநர் சபை உறுப்பினர்களான லயன் ம.மயூரதன், லயன் ரஜீவன் ஜெயச்சந்திரமூர்த்தி, லயன் பு.தினேஸ்குமார், லயன் இ.ஜெயபாலன், லயன் ஆர்.ஜெயசுதன் ஆகியோரிடம் விடுத்த கோரிக்கைக்கு அமைவாக முல்லைத்தீவு லயன்ஸ் கழகம் அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்டது.

இந்தப் பிரதேசம் மீதும் ஏனைய வடபகுதி மக்களின் சுகாதார மேம்பாடு தொடர்பிலும் மிகுந்த கரிசனையுடைய கொமர்ஷல் வங்கியின் நிர்வாக இயக்குநரும், பிரதம நிறைவேற்று அதிகாரியும், ஆளுநரின் பிரதம ஆலோசகரும் மோதிர மட்டக்குளிய லயன்ஸ் கழக உறுப்பினருமாகிய லயன் எஸ்.ரெங்கநாதன் நிகழ்வுக்குப் பிரதம அனுசரணை வழங்கியிருந்தமையோடு, பார்வைக் குறைபாடுடையவர்களுக்கு வழங்குவதற்காக 100 மூக்குக் கண்ணாடிகளையும் முல்லைத்தீவு லயன்ஸ் கழகத்தினரிடம் வழங்கிவைத்தார்.

இதேநேரம், லயன் எஸ்.ரெங்கநாதன் அண்மையில் முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலைக்கு 16 லட்சம் ரூபா பெறுமதியான இரத்த சுத்திகரிப்பு இயந்திரம் ஒன்றை புலம்பெயர் தேசத்திலுள்ள வைத்தியர் ஒருவரின் உதவியுடன் வழங்கியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

## யாழ். மூளாய் கூட்டுறவு வைத்தியசாலையின் சுகம்பேணும் நிலையம் வட்டுக்கோட்டையில்



மூளாய் கூட்டுறவு வைத்தியசாலையின் 'சுகம் பேணும் நிலையம்' வட்டுக்கோட்டை ஆத்தியடி பிள்ளையார் கோவிலுக்கு அருகில், கடந்த சனிக்கிழமை மாலை திறந்து வைக்கப்பட்டது.

மூளாய் - கூட்டுறவு வைத்தியசாலை சங்கத்தின் தலைவர் மா.ஞானேஸ்வரன் தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வில் யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சிறீசற்குணராசா பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு வைத்தியசாலையைச் சம்பிரதாய பூர்வமாகத் திறந்துவைத்தார்.

இந்த திறப்புவிழா நிகழ்வில் மூளாய் கூட்டுறவு வைத்தியசாலையின் செயலாளர் க.செல்வராசா, பொருளாளர் அ.கிருஷ்ணமூர்த்தி, வைத்திய அத்தியட்சகரும், யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடாதிபதியுமான வைத்திய கலாநிதி ஆர். சுரேந்திரகுமாரன், இருதய சிகிச்சை நிபுணர் வைத்திய கலாநிதி பூ.லக்ஸ்மன், வைத்தியர் பி.சிறீகிருஷ்ணா, வைத்தியர் எஸ்.றஜனி, வைத்திய நிபுணர் ஏ.வீரசுதன் மற்றும் சங்கானை பிரதேச வைத்திய அதிகாரி வைத்தியர் பி.யசிதரன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இந்த வைத்தியசாலையில் இலவச வைத்திய சேவைகளான நீரிழிவு பரிசோதனை, இரத்த பரிசோதனைகள் உள்ளிட்ட பல பரிசோதனைகள் இடம்பெறவுள்ளன. தினமும் காலை 7 மணி தொடக்கம் காலை 10 மணிவரை மற்றும் மாலை 4 மணி தொடக்கம் 7 மணி வரை, வைத்திய நிபுணர்கள் பலர் இணைந்து இலவசமாக மருத்துவ ஆலோசனைகளை வழங்க முன்வந்துள்ளனர்.

**Jaffna College Institute of Technology**
**Calls for the following courses**

**Computer Certificate Courses** *( 3 – 4 months Part time)*

- Certificate in MS OFFICE – (MS Word, Excel, Access & PowerPoint)
- Certificate in Graphic Designer – (PageMaker,PhotoShop & CorelDraw)
- Computer Hardware Technician
- Web Designing(HTML, CSS, JAVA Script, PHP, MYSQL)
- Java, C++ Programming

**Commencement in November 2021**
**At Our Jaffna Centre along**
**(Jaffna College Undergraduate dept. Building)**
**464 Hospital Road**
**Jaffna.**
**For further details contact**
**Tel no: 0212250975/0212223382**
**Email: ejcit@sltnet.lk.**

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## பிதாமகரின் – பிரதமரின் – தவறு

இலங்கையின் மூத்த அரசியல் தலைவர்களில் ஒருவர் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ.

வடக்கு, கிழக்குத் தமிழர்களைப் பொறுத்தளவில் அவர்களின் கணிப்பீட்டில் அவர் யுத்தக் குற்றங்களுக்கான சூத்திரதாரி. மனித உரிமை மீறல்களுக்கும், மனித குலத்துக்கு எதிரான குற்றங்களுக்கும் பொறுப்பானவர் அவர் என்ற சீற்றம் தமிழ் மக்களின் மனதில் ஆழமாகப் பதிந்திருக்கின்றது.

ஆனால், தென்னிலங்கை அரசியலில் இன்னும் அவர் பிதாமகர். தாம் கட்டி வளர்த்த புதிய அரசியல் தலைமைத்துவம் தம் கண் முன்னேயே சிதறுண்டு, சீரழிவதைப் பார்க்க வேண்டிய வரலாற்றுக் கெடுகாலம் அவருக்கு.

தாம் தமது நினைவு தெரிந்த நாள்களில் இருந்து, தமது தந்தையாரோடும் குடும்பத்தின் ஏனைய அங்கத்தவர்களோடும் சேர்ந்து கட்டி வளர்த்த சிறிலங்கா சுதந்திரக் கட்சியை விட்டு வெளியேறி, தனித்துவமான ஒரு புதிய கட்சியை உருவாக்க வேண்டிய வரலாற்றுக் கட்டாயம் அவருக்கு ஏற்பட்டபோது அதில் துணிந்து இறங்கினார்.

மஹிந்த ராஜபக்ஷ என்ற தனி மனிதனின் அரசியல் செல்வாக்கை மையவிசையாகக் கொண்டுதான் அந்தப் புதிய கட்சி கட்டவிழ்ந்தது. இலங்கையின் அரசியல் வரலாற்றில் வேறெந்தத் தேசியக் கட்சியும் சாதிக்காத வகையில் குறுகிய காலத்தில் பெரும் செல்வாக்கை எட்டி, மிக உச்சப் பலமுள்ள ஆளும் கட்சியாக அது உருவெடுத்தது.

உருவான வேகத்தில் ஆட்சியை அதிகாரத்தை பிடிப்பதற்கு மஹிந்த ராஜபக்ஷ என்ற அரசியல் மையவிசையே நடுநாயகமாக அமைந்தது.

ஆனால், வந்த வேகத்திலேயே காற்றுப் போகும் கட்டத்திற்கு அவரது பொதுஜன பெரமுன – மெட்டுக் கட்சி – சென்றிருப்பதுதான் இந்த நீண்ட அரசியல் வரலாற்றுப் பின்னணியைக் கொண்ட தலைவரின் இன்றைய துன்பியல் நிலைமையாகும்.

அதனைத் தம்முடைய அந்தக் கட்சியின் ஐந்தாவது ஆண்டு நிறைவை ஒட்டி கடந்த செவ்வாய்க்கிழமை கொழும்பு தாமரைத் தடாகக் கலையரங்கில் நடந்த கூட்டத்தில் பெரு விசனத்துடன் சுட்டிக்காட்டியிருக்கின்றார் அவர்.

அந்த நிகழ்வில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஆற்றிய உரை அவரது கட்சியினரின் மனதை மட்டுமல்ல, தென்னிலங்கை மக்களின் மனதையும் அதிகம் தொட்டிருப்பதாக தென்னிலங்கை அரசியல் அவதானிகள் கூறுகின்றனர்.

தமது ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சி அதிகாரத்துக்கு வந்த பின்னர் ஆட்சியதிகாரத்தைப் பற்றிச் சிந்தித்ததே தவிர, மக்கள் மத்தியில் அரசியல் வேலை செய்யவே இலங்கை என்று அவர் வெளிப்படையாகவே விசனம் தெரிவித்தார்.

அதிபர்கள், ஆசிரியர்களின் தொழிற்சங்கப் போராட்டம் தீவிரமடைந்திருக்கின்றது. விவாசாயிகள் வீதிக்கு இறங்கியிருக்கின்றனர். மின்சார சபை ஊழியர்கள் தொழிற்சங்க அச்சுறுத்தல் விடுத்திருக்கின்றனர். கொரோனாத் தொற்றுக்கு மத்தியில் சுகாதார ஊழியர்கள் அதிருப்தி நிலையை வெளிப்படுத்தியிருக்கின்றனர். மொத்தத்தில் அரசுக்கும் ஆட்சிப் பீடத்துக்கும் எதிராக மொழி, மத, இன, தொழில், வயது வேறுபாடின்றி மக்கள் அனைவரும் திரண்டு வருகின்றனர். மக்களின் எதிர்ப்புணர்வுப் போக்குப் பீறிட்டு வருகின்றது.

ஆட்சி அதிகாரத்துக்கு வந்த பின்னர் தமது கட்சியினர் மக்கள் மத்தியில் சரியாக அரசியல் வேலை செய்யாதமைதான் இந்தப் பின்னடைவு நிலைக்குக் காரணம் என அரசியலில் மெத்தப் படித்த பிதாமகரான பிரதமர் எடுத்துரைக்கின்றார். அரசியலில் பழமும் தின்று கொட்டையும் போட்ட அவரின் பழுத்த அனுபவம் இப்படிப் பேசுகின்றது. உண்மைதான்.

ஆனால், 'அறப்படித்த பல்லி கூழ்ப் பானைக்குள் விழுந்த' மாதிரியாக, இவ்விடயத்தில் அரசியலில் அதிகம் பட்டறிந்த தேர்ந்த அனுபவசாலியான தாமே இத்தனை பின்னடைவுக்கும் பிரதான காரணம் என்ற உண்மையை அவர் அந்த மேடையில் கூறாமல் போனமைதான் ஒரே தவறாகும்.

அரசியலே தெரியாத – அரசியலே செய்யத் தெரியாத – முன்னாள் இராணுவ அதிகாரியான தனது தம்பியாரை நிறைவேற்றதிகார ஜனாதிபதியாகவும், ஆட்சிப்பீடத்தின் தலைவராகவும் கொண்டு வந்தவரே அவர்தான். அதிகாரத்துக்கு – ஆட்சிக்கு – வந்த பின் தமது கட்சி மக்களிடையே அரசியல் செய்யவில்லை என்றால் அப்படி அரசியல் செய்ய முடியாதவரை தலைவராக்கிய பிதாமகர் – பிரதமர் – மஹிந்தவின் முழுத் தவறுதான் அதற்குக் காரணம். அதற்காக அவர் யாரையும் நோவதில் பயன் ஏதுமில்லை.

## அரசியல் நோக்கங்களுக்காக அரசு பல்கலையைப் பயன்படுத்துகின்றது

### பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் குற்றச்சாட்டு

தற்போதைய அரசாங்கம் பல்கலைக் கழகத்தை அரசியல் நோக்கங்களுக்காகப் பயன்படுத்துவதாக களனி பல்கலைக் கழக மாணவர் ஒன்றியம் குற்றம் சாட்டியுள்ளது.

பல்கலைக்கழக துணைவேந்தர் உள்ளிட்ட நியமனங்கள் அதற்கு சிறந்த உதாரணம் என மாணவர் ஒன்றியம் சுட்டிக்காட்டியுள்ளது.

கொழும்பு பல்கலைக்கழகத்தின் உபவேந்தராக முருத்தெட்டுவே ஆனந்த தேரரின் நியமனத்தை பொதுமக்கள் நிராகரித்துள்ளனர் என ஒன்றியம் மேலும் தெரிவித்துள்ளது.

தற்போதைய அரசாங்கத்தை ஆட்சிக்குக் கொண்டுவருவதில் பிக்குகள் முக்கிய பங்காற்றியமை காரணமாகேவே இந்த நியமங்கள் வழங்கப்படுகின்றன என அவர்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

களனி பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் அறிக்கை ஒன்றை வெளியிட்டு, இவ்வாறான அரசியல் நியமனங்களைத் தாம் வன்மையாகக் கண்டிப்பதாகத் தெரிவித்துள்ளது.

## மேல் மாகாணத்தில் 1,019 பேர் சிக்கினர்

கொழும்பு மாவட்டம் உள்ளிட்ட மேல் மாகாணத்தில் முன்னெடுக்கப்பட்ட திடீர் பொலிஸ் சுற்றிவளைப்பு நடவடிக்கையில் 1,019 பேர் கைதாகியுள்ளனர்.

மேல் மாகாணத்துக்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோனின் உத்தரவுக்கமைய, நேற்றுமுன்தினம் காலை 6 மணி முதல் மாலை 7 மணி வரையில் இந்தச் சுற்றிவளைப்பு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது எனப் பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இதன்போது, நீதிமன்றங்களால் பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருந்த 468 பேரும், ஊழல் மோசடி குற்றச்சாட்டுகளுடன் தொடர்புடைய 393 பேரும் மற்றும் வேறு குற்றச் செயல்களுடன் சம்பந்தப்பட்ட 70 சந்தேகநபர்களும் கைதுசெய்யப்பட்டுள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவர்களை நீதிமன்றங்களில் ஆஜர்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது எனவும் பொலிஸ் ஊடகப் பிரிவு மேலும் குறிப்பிட்டுள்ளது.

## கொக்குவிலில் வாள்வெட்டு இளைஞன் ஒருவர் படுகாயம்!

கொக்குவில் கேணியடிப் பகுதியில் நடந்த வாள்வெட்டுச் சம்பவத்தில் இளைஞர் ஒருவர் படுகாயமடைந்த நிலையில், யாழ்.போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

சனி இரவு 8 மணியளவில் நடந்த இந்தச் சம்பவத்தில் குறித்த பகுதியைச் சேர்ந்த உதய குமார் ரதீபன் என்னும் இளைஞரே காயமடைந்துள்ளார்.

மோட்டார் சைக்கிளில் வந்த 3 பேர் கொண்ட குழுவினால் இளைஞர் மீது வாள் வெட்டுத் தாக்குதல் நடத்தப்பட்டது.

கை, கால் பகுதிகளில் காயமடைந்த குறித்த இளைஞர் அங்கிருந்து மீட்கப்பட்டு சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக யாழ்ப்பாண பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

## நிலைமை சீர்செய்யப்படும் பொறுமையாக இருங்கள்!

### ஜீவன் உத்தரவாதம்



இந்த அரசுமீது மக்கள் தற்போது கடும் அதிருப்தியில் உள்ளனர். இன்னும் சிறிது காலம் பொறுமையாக இருங்கள். நிலைமை சீர்செய்யப்படும் என இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளரும் இராஜாங்க அமைச்சருமான ஜீவன் தொண்டமான் தெரிவித்தார்.

கொட்டகலை பிரதேச சபைக்கு உட்பட்ட கிறிஸ்லஸ்பாம் – கே.ஜி.கே. பாதை மக்கள் பாவனைக்காக நேற்று (ஞாயிற்றுக்கிழமை) கையளிக்கப்பட்டது. இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார். இதன்போது அவர் மேலும் கூறுகையில் –

பெருந்தோட்டப்பகுதிகளில் உள்ள பாடசாலைகள் மேம்படுத்தப்பட வேண்டும். வீதிகள் புனரமைக்கப்பட வேண்டும். இந்த இரண்டு விடயங்களையும் சிறப்பாகச் செய்துமுடித்தால் ஏனைய அபிவிருத்தி நடவடிக்கைகள் தானாகவே நடக்கும்.

நன்றி மறக்கக்கூடாது என அனுசியா அம்மையார் குறிப்பிட்டார். எனவே, நெருக்கடியான கால கட்டத்திலும் வீதி புனரமைப்பு பணியில் ஈடுபட்ட வீதி அபிவிருத்தி சபை அதிகாரிகளுக்கும் ஊழியர்களுக்கும் இச்சந்தர்ப்பத்தில் நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

பொருள்களின் விலையேற்றத்தால் மக்களுக்கு வாழ்வாதாரப் பிரச்சினை ஏற்பட்டுள்ளது. இதனால் அரசு மீது அதிருப்தியில் உள்ளனர். இங்கு மட்டுமல்ல உலக நாடுகளிலும் இந்நிலைமை நீடிக்கின்றது. எனவே, பொறுமை காக்கவும். இன்னும் ஒரு வருடத்துக்குள் நிலைமை சீர் செய்யப்படும். என்றும் 'நாங்கள் உங்களுடன்' என அவர் மேலும் தெரிவித்தார்.

வடமாகாண மரநடுகை மாதம்
கார்த்திகை - 2021

"பூமியிலே மனிதனுடைய சிறந்த நண்பனாக விளங்குவது மரம். இதை நாம் உரிய மதிப்புடனும் சிக்கனமாகவும் பயன்படுத்தும்போது பூமியிலுள்ள மிகச் சிறந்த வளங்களில் ஒன்றாக நாம் அவற்றைக் கொண்டிருப்போம்."

- பிராங்க் லோயிட் றைற்
(அமெரிக்க கட்டிடக் கலைஞர், எழுத்தாளர்)



காலைக்கதிர் Kalaikkathir

# கௌதாரிமுனை பிள்ளையார், மண்ணித்தலை சிவன் புனரமைப்பதற்கு அமைச்சர் டக்ளஸ் நடவடிக்கை!









ஈழத் தமிழர்களின் புராதன தொல்லியல் ஆதாரங்களாகத்திகழும் கௌதாரிமுனை பிள்ளையார் மற்றும் மண்ணித்தலைச் சிவன் ஆலயங்களின் தொன்மை அடையாளங்களை அப்படியே பேணும் செயற்பாடு அமைச்சர் டக்ளஸின் முயற்சியால் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

தேசிய மரபுரிமைகள், அருங்கலைகள் மற்றும் கிராமிய சிற்பக்கலைகள் மேம்பாட்டு இராஜாங்க அமைச்சர் விதுர விக்கிரமநாயக்கவால் இந்த நடவடிக்கை, கடற்றொழில் அமைச்சரும், கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப் புக்குழு இணைத் தலைவருமான டக்ளஸ் தேவானந்தாவின் மேலதிக இணைப்பாளர் றுஷாங்கனின் பங்கேற்புடன் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

முன்னதாக கௌதாரிமுனை மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தும் வகையில் அந்தப் பகுதி கடற்றொழிலாளர்களுக்கு கடலட்டைப் பண்ணைகளை வழங்கியதுடன், மேலதிகமாக அந்தப் பகுதி காணிகளற்ற மக்களுக்கு நெற்செய்கைக்காக 100 ஏக்கருக்கும் அதிகமான வயல் காணிகளையும் வழங்க அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஏற்பாடு செய்திருந்தார்.

இந்த நடவடிக்கைகளின்போது, ஈழத் தமிழர்களின் தொன்மை வரலாற்று ஆதாரமாகத் திகழும் கௌதாரிமுனை பிள்ளையார் மற்றும் மண்ணித்தலை சிவன் ஆலயங்களைப் புனரமைத்துத் தொன்மைகெடாமல்பேணவேண்டியதன் அவசியம் குறித்தும் அவர் கவனம் செலுத்தியிருந்தார்.

இதன்படி, தொல்லியல் திணைக்களத்தினர் இந்தப் பகுதிக்குச் சென்று மேற்படி ஆலயங்களை ஆராய்ந்து, அவற்றை புனரமைத்துப் பேணும் நடவடிக்கைகளை ஆரம்பித்திருந்தனர்.

இந்த நடவடிக்கைகளின் ஆரம்பத்தில் இதுதொடர்பாக மக்கள் மத்தியில் எழுந்த சந்தேகங்களை பிரதேச செயலாளர் கிருஷ்ணேந்திரன் மற்றும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் பூநகரி பிரதேச இணைப்பாளர் இராசலிங்கம் ஆகியோருடன் இணைந்து அமைச்சரின் மேலதிக இணைப்பாளர் கோ.றுஷாங்கன் தீர்த்துவைத்தார்.

தொடர்ந்து கௌதாரிமுனை மற்றும் மண்ணித்தலைப் பிரதேசங்களின் தொன்மை வரலாறு தொடர்பாக அந்தப் பகுதியில் பல வருடங்களுக்கு முன்னரே தொல்லியல் ஆய்வுகளை மேற்கொண்ட யாழ்.பல்கலைக்கழக ஓய்வுநிலைப் பேராசிரியர் புஷ்பரட்ணத்தை தொல்லியல்திணைக்களம்ஊடாகவரவழைத்து பிரதேச மக்களுக்கு விளக்கமளிக்கப்பட்டது.

இதன் தொடர்ச்சியாக தேசிய மரபுரிமைகள், அருங்கலைகள் மற்றும் கிராமிய சிற்பக் கலைகள் இராஜாங்க அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க தீபாவளி தினத்தில் கௌதாரிமுனைப் பிரதேசத்துக்கு வருகை தந்து, கௌதாரிமுனை பிள்ளையார் மற்றும் மண்ணித்தலை சிவன் ஆலயங்களின் தொன்மை கெடாமல் அவற்றைப் பேணும் கட்டுமான நடவடிக்கைகளை உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைத்தார். அதே தினத்தில் முல்லைத்தீவு மாவட்ட மீனவர்களின் அவசர பிரச்சினைகள் தொடர்பாக ஆராய் வதற்காக கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அங்கு அவசரமாகச் செல்லவேண்டியிருந்தால், தமது மேலதிக இணைப்பாளர் கோ.றுஷாங்கனை தமது சார்பாக இந்த நிகழ்வில் இராஜாங்க அமைச்சர் விதுர விக்கிரமநாயக்கவுடன் இணைந்து கலந்து கொள்ளுமாறு அனுப்பிவைத்திருந்தார்.

கட்டுவன் ஐப்பதாஸக் குருக்களின் விசேட பூஜை ஆராதனைகள் மற்றும் வழிபாட்டுடன் ஆரம்பிக்கப்பட்ட இந்த நிகழ்வில் பக்தி சிரத்தையுடன் இந்துமத அனுட்டானங்களை பின்பற்றி கலந்து கொண்ட இராஜாங்க அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க, கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் மேலதிக இணைப்பாளர் கோ.றுஷாங்கனுடன், அந்தச் சமயம் அங்கு வருகை தந்திருந்த யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், பிரதிக் குழுக்களின் தலைவருமான அங்கஜன் இராமநாதனுடனும் இணைந்து ஆலயங்களின் தொல்லியல் சான்றுகளைப் பேணும் கட்டுமான நடவடிக்கைகளை உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைத்தார். இந்த நிகழ்வில், கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் ரூபவதி கேதீஸ்வரன், பூநகரி பிரதேச செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர் அருட் செல்வம், இராஜாங்க அமைச்சின் செயலாளர், தொல்லியல் திணைக்கள பணிப்பாளர் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# நல்லூர் லியோ கழகத்தினால் யாழ்.மாவட்டத்தில் மர நடுகை





**ந.லோகதயாளன்.**

யாழ்ப்பாணம், நவ.08

சர்வதேச லயன்ஸ் கழக மரநடுகை மாதத்தில் நல்லூர் லியோ கழகத்தால் 1,500 மாமரங்கள் யாழ் மாவட்டத்தினது பல்வேறு பகுதிகளிலும் நாட்டப்படுகின்றன.

இந்த மரங்கள் லயன் மயில்வாகனம் ஸ்ரீ கிருஷ்ணனின் பரிந்துரைக்கேற்ப இலங்கை மேமண் சங்கம், இஸ்லாம் போதனை மற்றும் சிற்றி ஹார்டின் ஆகிய நிறுவனங்களால் நல்லூர் லியோ கழகத்திற்கு 5 லட்சம் ரூபா பெறுமதியான மரங்கள் அன்பளிப்பாக வழங்கப்பட்டன.

இந்தச் செயற்த்திட்டம் ஒக்ரோபர் 30 ஆம் திகதி திருமகள் சனசமூக நிலையத்தில் அரியாலையில் நல்லூர் லியோ கழக தலைவர் லியோ தரங்கினி முகுந்தன் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் லயன்ஸ் மாவட்ட 306 பி1 ஆளுநர் லயன் ஆர்.எல்.ராஜ்குமார், முன்னாள் கழக தலைவர் கொழும்பு ஷேர்கில் லயன்ஸ் கழகம் லயன் மயில்வாகனம் ஸ்ரீகிருஷ்ணன், லயன்ஸ் மாவட்ட செயலாளர் தேசமான்ய லயன் கலாநிதி ஜீவந்த பெரேரா, லயன்ஸ் மாவட்ட இணைப்பாளர் பூகோள சேவைக் குழு-(ஜி.எஸ்.எல்.) லயன் கமலேஸ்வரி மற்றும் நல்லூர் லயன்ஸ் கழக தலைவர் லயன் கலாநிதி ஜ.ஜெயலக்ஸ்மி ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.





# கந்த சஷ்டி விரத புண்ணிய காலத்தில் நாவலர் மண்டபத்தில் இசை அர்ச்சனை

இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில், கந்தசஷ்டி விரத புண்ணிய காலத்தில், ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் மணிமண்டபத்தில், மாலை 3.00 மணி தொடக்கம் 4 மணிவரை முருக பக்திப் பாடல்கள் இசை அர்ச்சனை நிகழ்வு இடம்பெற்று வருகிறது.

முதலாம் நாள் நிகழ்விலே, இசைக் கலைமாணி, பண்ணிசைக் கலாவித்தகர், சங்கீத கலாவித்தகர் செல்வி சந்திரிக்கா கணேஸ்பரனும் கலாவித்தகர் ஹிமாலினி சுகந்தனும் இணைந்து வழங்கிய ‘திருமுருக கீர்த்தனம்’ நிகழ்வு சிறப்புற இடம்பெற்றது. அணிசேர் கலைஞர்களாக மிருதங்கம் – கலாவித்தகர் கிருபா அனந்தகோபனும்;வயலின் – கலாவித்தகர் திருமதி வனஜா ஈஸ்வரசர்மாவும் கெஞ்சிரா – ஸ்ரீ டிலுக்சனும் பங்குபற்றியிருந்தனர்.



- செல்லத்துரை ரவீந்திரன் -

இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கை புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். ‘இனப்படுகொலை’, ‘இனச்சுத்திகரிப்பு’ ஆகிய பதங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்களை விளக்குகின்றது அவரது இந்தக் கட்டுரைத் தொடர். இந்தக் கட்டுரைத் தொடருக்கான ஆய்வுக் குறிப்புகளைத் தேடித் தந்துதவியவர் சட்டத்தரணி நிர்மலா பேர்னாட் யோசப். அவர் தற்போது மனிதாபிமானச் சட்டங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்கள் பற்றிய தமது முதுநிலைப்பட்ட ஆய்வை ஆஸ்திரேலிய பல்கலைக்கழகம் ஒன்றில் மேற்கொண்டு வருகின்றார். அவர் முன்னர் இலங்கையில்மாற்றுக் கொள்கைகளுக்கான மையத்துடன் சேர்ந்து இயங்கியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## அங்கம் - 185

# இனப் படுகொலையும் தமிழ் மக்களின் அரசியலும்

**466. அமெரிக்க ஸ்ரீலங்காவின் பின்னணி என்ன? ஏன் அந்த முக்கியத்துவம்?**


அமெரிக்காவுக்கு ஸ்ரீலங்காவுடன், கட்டமைப்புகளுடனான ஆழமான உறவு இருந்தது. 1951 இல் இருந்து அமெரிக்காவின் ஒலிபரப்புச் சேவையை (Voice Of America) அங்கிருந்து நடத்துவதற்கு இருந்த ஏற்பாடுகள் 1983 இல் இரணவிலவில் 500 ஏக்கர் பரப்பிலான காணி



‘வொய்ஸ் ஒவ் அமெரிக்கா’வின் இரணவில நிலையம்

யில் விஸ்தரிக்கப்பட்டு ஆசியாவின் பல பகுதிகளையும் எட்டக் கூடிய சேவையாக வளர்ந்தது. 1950 இலிருந்தே அமெரிக்காவின் இராணுவ அதிகாரிகள் திருகோணமலை தங்களது தளங்களாக இயக்கப்படுவதற்கான அதிகாரம் தமக்கு உண்டு என்ற மனப்பாங்கு கொண்டிருந்தனர். 1997 இல் ஜே. ஆர். பதவிக்கு வந்ததும், அமெரிக்காவுடனான புது உறவை மறைமுகமாகவும், வெளிப்படையாகவும் வளர்த்தார்.

1982 ஜெனரல் வேர்னன் வால்டேர்ஸ் (General Vernon Walters) முன்னர் அமெரிக்க சி.ஐ.ஏ. நிறுவனத்தின் துணை ஆணையாளராக இருந்தவர். ஸ்ரீலங்கா வந்து தங்களது தூதரகத்துக்குள்ளேயே இஸ்ரேலின் தேவைகளை அனுசரித்து நடத்துவதற்காக ஒரு அலுவலகத்தை அமைத்தார். அதனூடாக இஸ்ரேலின்



ஜெனரல் வேர்னன் வால்டேர்ஸ்

இராணுவம் ஸ்ரீலங்காவின் பிரத்தியேக பணிக்கான இராணுவப் பிரிவுகளுக்கு (Special Task Force) பயிற்சிகள் தந்தனர். ஆனால் அந்த நாள்களில் ஸ்ரீலங்கா இஸ்ரேலுடன் சம்பிரதாய உறவுகள் வைத்துக் கொண்டிருக்கவில்லை. இந்த பயிற்சிகளின் உதவிக்கு அமெரிக்கா அளித்த விளக்கம் தாங்களும் ஸ்ரீலங்காவும் சர்வதேச பயங்கரவாதத்தை ஒழிப்பதில் எப்பொழுதும் அக்கறை கொண்டிருப்பதால் இவை செய்யப்படுகின்றன என்பதே.

அதற்கு கைமாறாக அமெரிக்க விமானங்கள் ஸ்ரீலங்காவின் வான் பரப்பில் பறப்பதற்கும் அவர்களின் கப்பல்கள், விமானங்களை தங்கவைப்பதற்கும் அங்கிருந்து இஸ்ரேல் அரபு நாடுகளுக்கு எதிராக நடத்திய தாக்குதல்களுக்கு இவை பாவிக்க அனுமதித்ததும்தான்.

இவற்றால் மனித உரிமைகள் மீறப்படுவதை ஒட்டி இரண்டு நாடுகளுக்கும் எதிராக குரல்கள் எழுந்தாலும் இவற்றைப் பற்றி எவ்வித கணக்கும் கொள்ளாமல் அமெரிக்கா, ஸ்ரீலங்கா இராணுவத்தைப் பயிற்றுவித்துக் கொண்டேயிருந்தது.

ஸ்ரீலங்காவின் இந்த அணுகுமுறையும் அதன் தளங்கள் இந்தியாவுக்கு எதிராகப் பாவிக்கப்பட்டு அதன் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல்கள் தரப்படலாம் என்ற



றொனால்ட் றேகன்

எண்ணங்களிலேயே தமிழர் கோரிக்கைகளை அடித்தளமாக்கி இந்தியா -இலங்கை ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டது. அமெரிக்காவின் உதவியில் பாகிஸ்தான் அவர்களின் கால்வருடியாக இருந்தது. அந்த ஒழுங்குகளால் காஷ்மீரில் இந்தியாவுக்கு தலையிடி. ஸ்ரீலங்காவிலும் அப்படியான ஒரு நிலையை வளரவிட இந்தியா விரும்பவில்லை.


ஆனால் இந்திய ஒப்பந்தத்தின் பிறகு, விடுதலைப் புலிகள் அவர்களோடு முரண்பட்டு, ஸ்ரீலங்காவிடமிருந்து ஆயுதங்கள் பெற்று இந்தியாவை வெளியேற்றினர். திருகோணமலை துறைமுகத்தில் இந்தியாவுக்கு இருந்த கண்களை நன்றாகவே அறிந்திருந்தோம் என விடுதலைப் புலிகள் தெரிவித்திருந்தமையால் அவர்களின் அந்த அடிப்படை நிலையை ஒட்டி அமெரிக்கா ஸ்ரீலங்காவிற்கான தங்களது வியூகத்தை விடுதலைப் புலிகளின் வளர்ச்சியையும் ஒட்டி தொலைநோக்கிக் கணித்து, சர்வதேசத்தில் இயங்கியது.

**467. அந்த வியூகம் எதுவாக இருந்தது? அது தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்தை உள்ளடக்கியதா?**

அந்த வியூகம் அமெரிக்காவின் வர்த்தக நலன்களையும், அதன் உலக ஏகாதிபத்தியத்தின் அதிகாரங்களையும் ஒட்டியது. அமெரிக்காவின் ஜனாதிபதிகளோ, காங்கிரஸோ, அதன் கொள்கை வகுப்பாளர்களோ தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்தை. அதன் பின் இந்தியாவின் தலையீட்டைத் தொடர்ந்த விடுதலைப் புலிகளின் வளர்ச்சியை, அவர்களின் ஆதிக்க நிலையை அறியாமல் இல்லை.

மஸாசூட்ஸ் (Massachuotts) மாநிலம் நிறைவேற்றிய தீர்மானம் அமெரிக்க காங்கிரஸுக்கு பாரப்படுத்தப்பட்டு தொடர்ந்தும் அங்கிருந்த தமிழ் மக்களால் சமர்ப்பணங்கள் செய்யப்பட்டிருந்தன. அமெரிக்காவின் நியூயோர்க் மகாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தமிழ் ஈழ தீர்மானங்களும் அதைத் தொடர்ந்த பல நிகழ்வுகளும் கொள்கை வகுப்பாளர்களுக்கு அங்கு வதிந்த மக்களாலும் தமிழ் மக்களாலும் அறியத்தரப்பட்டிருந்தன.

அவற்றையெல்லாம் மீறி, அமெரிக்காவில் நடந்த இரட்டைக் கோபுரத் தாக்குதல்களுக்குப் பிறகு விடுதலைப் புலிகளை ஓர் உரிமைக்காகப் போராடும் குழுவாகக் கருதாமல் பயங்கரவாதக் குழுவாகவே அமெரிக்கா பட்டியலிட்டது. விடுதலைப் புலிகளின் பெயர்பெற்ற அவர்களின் வன்முறைச் சம்பவங்கள் இதற்குத் துணைபோனாலும் அவற்றை விலத்தி அதன் அடிப்படையில் இருந்த தமிழ்மக்களின் உரிமைப் போராட்டத்தை தங்களது நலனோடு ஒத்துப் பார்த்தபோது, அவர்களது வர்த்தக நலன்கள் மேலோங்கியே நின்றன. அத்தோடு அமெரிக்காவுக்கு, பாகிஸ்தானோடு இருந்த உறவுகளில் ஏற்பட்ட நம்பிக்கையீனம், அதனால் அவர்கள் ஆப்கானிஸ்தானில் நடத்திய போருக்கு தொடர்ந்து கொண்டிருந்த பாதிப்புக்கள், திருகோணமலையில் தங்கள் கப்பல்கள் தரித்து எண்ணைக் குதங்களை பாவிப்பதற்கும், விமானங்கள் வான் பரப்பில் பறந்து ஆப்கானிஸ்தானை அடைவதற்கும் இலங்கையின் அனுசரணை தேவைப்பட்டமை, அத்தோடு வளர்ந்து வரும் சீனாவின் அதிகாரத்தை இந்தியக் கடற்பரப்பில் கட்டுப்படுத்த வேண்டிய நிலைமை போன்றன இருந்தன. இவற்றிற்கு முட்டுக்கட்டையாக இலங்கை – இந்திய ஒப்பந்தம் இருந்தது. அதன்படி இந்தியாவின் அனுமதி இல்லாமல் ஸ்ரீலங்காவின் முக்கியமாக திருகோணமலை துறைமுகம் போன்றவை, இந்தியாவின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தக்கூடிய விதத்தில் எந்தநாட்டுக்கும் பாவனைக்கு கையளிக்கப்படக் கூடாது என்பது ஒரு சரத்தாக அதில் இருந்தது.



ஜே.ஆர்.ஜெயவர்த்தனா

அவை ஜே.ஆரின் காலத்தில் அவருக்கு அமெரிக்காவோடு இருந்த நெருக்கத்தில் அமெரிக்காவை குறிவைத்தே ஆக்கப்பட்டன.



இந்திரா காந்தி

அரசியலில் நிரந்தர நண்பர்களும் இல்லை, எதிரிகளும் இல்லை என்பது சாணக்கியர் காலத்திலிருந்தே அறியப்பட்ட யதார்த்தம். அதனை மாற்றங்களைக் கொண்டு வரும் அரசியல் நிகழ்வுகளே தீர்மானிக்கின்றன.

சீனாவின் எழுச்சி இந்தியாவையும் பாதித்தது. அதன் சுற்றாடலில் அதற்கு இருந்த ஆளுமையையும் கேள்விக் குறியாக்கியது. இவற்றைக் கட்டுப்படுத்த இந்தியாவுக்கும் ஓர் அனுசரணை தேவைப்பட்டது. ஆகவே தங்களோடு இணைந்து இந்தியக் கடற்பரப்பில் ஆதிக்கத்தை நிறுத்த அமெரிக்காவோடு சில தீர்மானங்கள் இந்தியாவால் ஏற்படுத்தப்



றிச்சர்ட் நிக்ஸன்

பட்டன.

அதுவரை காலமும் அமெரிக்கா தனது உலக வல்லாதிக்கத்தை எந்த ஒரு நாட்டுடனும் பங்குபோட சம்மதித்தது இல்லை. இந்திரா காலத்தில் அவரை – அமெரிக்க ஜனாதிபதிகள் முக்கியமாக நிக்ஸனோ றேகன் போன்றவர்கள் தனிப்பட்ட ரீதியில் மதித்ததும் இல்லை. இந்திரா ரஷ்யாவோடு பாதுகாப்பு ஒப்பந்தங்கள் ஏற்படுத்தியிருந்தார்.

இந்தியக் கடல் பரப்பில் இந்தியாவின் ஆளுமையை ஏற்று, மேற்குலகின் சர்வதேச உலக நடப்புக்குள் ஸ்ரீலங்காவைக் கொண்டு வருவதற்காக உபாயங்களை அமெரிக்கா முன்னெடுக்க இந்தியாவும் ஏற்றுக்கொண்டது.

இவற்றைத் தமிழ் மக்களின் சர்வதேச கருத்தாளர்கள் புரிந்து கொண்டார்களோ, இல்லையோ விடுதலைப் புலிகள் தங்களது ஆயுதப் பலத்திலும், அர்ப்பணிப்பிலும் நம்பிக்கை வைத்து, நாட்டிலும் புலம்பெயரிலும் அவர்களுக்குப் பின்னால் பயணிக்குமாறு கோரினார்கள். உணர்ச்சிகளே ஆட்டிப்படைத்தன.

(வளரும்....)

# காணாமல்போனவர்கள் தொடர்பில் ஆராய டக்ளஸை நியமித்தமையை ஏற்கமுடியாது

## கடந்தகாலத்தில் கடத்தல் கொள்ளைகளில் அவரும் அவரது ஈ.பி.டி.பியினரும் ஈடுபட்டனர்



காணாமலாக்கப்பட்ட சம்பவங்களுடன் தொடர்புடையதாகக் கூறப்படும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை காணாமலாக்கப்பட்டவர் தொடர்பாக ஆராய்வதற்காக ஜனாதிபதி நியமித்துள்ளமையை ஏற்க முடியாதென மட்டக்களப்பு மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் தெரிவித்தார்.

### சாணக்கியன் கடும் சீற்றம்

மட்டக்களப்பில் நேற்று (ஞாயிற்றுக்கிழமை) ஊடகங்களுக்குக் கருத்து வெளியிடும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். இதன்போது, தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர் -

இந்த அரசாங்கம் பொய்யான ஓர் அரசாங்கம். அனைத்து விடயங்களிலும் பொய்யும் ஊழலும் மோசடியும் மக்களுக்கு சுதந்திரமில்லாத ஒரு மோசமான அரசாங்கத்தின் அமைச்சர்களின் செயற்பாடுகள் எவ்வாறு இருக்கும் என்று அனைவருக்கும் தெரியும்.

ஜனாதிபதி தொடக்கம் பிரதமர், அமைச்சர்கள் பொய்களை சொல்லும் நிலைப்பாடே காணப்படுகின்றது. வியாபார நோக்குடனும் இந்த அரசாங்கம் செயற்பட்டு வருகின்றது.

நான் மட்டக்களப்பு மாவட்டத்தில் மீனவர்கள் எதிர்நோக்கும் பல்வேறு பிரச்சினைகள் தொடர்பாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் கவனத்துக்குக் கொண்டுசென்றிருந்தேன். அவற்றில் எதனையும் பூர்த்திசெய்யாமல் சிறிய ஒரு விடயத்தை மட்டும் செய்து விட்டு அதற்கொரு மாபெரும் திறப்பு விழாவை செய்து விட்டு சென்றிருந்தார்.

இலங்கையில் காணாமலாக்கப்பட்டவர் தொடர்பில் ஆராய்வதற்காக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை ஜனாதிபதி நியமித்துள்ளார் என செய்திகளில் பார்க்க கூடியதாகவுள்ளது. கடந்த காலத்தில் கடத்தல், காணாமல்போதல் சம்பவங்களுக்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் ஈ.பி.டி.பி. குழுவுக்கும் தொடர்பிருப்பதாக பல்வேறு நிபுணர் குழுவின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள நிலையில் அவரை நியமித்தமை ஏற்றுக் கொள்ளமுடியாது.

இலங்கையில் உள்ள மீனவர்களின் பிரச்சினையை பார்க்கமுடியாத அமைச்சர் எவ்வாறு அந்தமானில் உள்ள மீனவர்களைப் பார்க்கப்போகின்றார். எந்தவொரு விடயத்திலும் அமைச்சர் டக்ளஸ் மீது நம்பிக்கை வைக்க முடியாது. - என அவர் மேலும் தெரிவித்தார்.

## சகோதரனுடன் சென்ற பெண் தெல்லிப்பழையில் கடத்தல்!

யாழ்ப்பாணம் - தெல்லிப்பழை பகுதியில் சகோதரனுடன் மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்த இளம் பெண்ணொருவர் வானில் வந்த கும்பலால் கடத்தி செல்லப்பட்டுள்ளார்.

தெல்லிப்பழை பகுதியில் கடந்த சனிக்கிழமை இந்த சம்பவம் இடம்பெற்றதாக பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

தெல்லிப்பழை வைத்தியசாலையில் பணிபுரியும் குறித்த பெண் தனது சகோதரனுடன், மோட்டார் சைக்கிளில் வைத்தியசாலைக்குச் சென்று கொண்டிருந்தபோது, ஹயஸ் ரக வாகனத்தில் வந்த கும்பல் ஒன்று சகோதரன் மீது தாக்குதலை மேற்கொண்டு, பெண்ணை கடத்திச் சென்றுள்ளதாக அந்த முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் தொடர்பாக தெல்லிப்பழை பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

## 62 வீத மாணவர்களுக்கு தடுப்பூசி செலுத்தப்பட்டது

நாட்டில் 16 தொடக்கம் 19 வயதுக்கிடைப்பட்ட பாடசாலை மாணவர்களில் இதுவரை சுமார் 62 வீதமானோர், கொரோனாத் தடுப்பூசிகளை பெற்றுக் கொண்டுள்ளனர்.

சுகாதார அமைச்சின் முக்கிய அதிகாரி ஒருவரினை மேற்கோள்காட்டி இந்த தகவல் வெளியாகியுள்ளது.

இதனிடையே, பிரித்தானியாவினால் அனுமதியளிக்கப்பட்டுள்ள அமெரிக்க தயாரிப்பான 'மொல்னுபிரவீர்' மருந்தை இலங்கையில் பயன்படுத்துவது தொடர்பில் மருந்து தயாரிப்பு, விநியோகம் மற்றும் கட்டுப்பாட்டு இராஜாங்க அமைச்சால் கவனம் செலுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

## முல்லைத்தீவு மீனவர்களை சந்தித்து பேசினார் சுமந்திரன்

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினை தொடர்பான கலந்துரையாடல் முல்லைத்தீவு கள்ள பாட்டுப் பகுதியில் இடம்பெற்றது.

இதில் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் மற்றும் முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் மற்றும் சுஜீவன் உள்ளிட்டவர்கள் கலந்துகொண்டனர்.

இதன்போது மீனவர்கள் தாம் அன்றாடம் எதிர்நோக்குகின்ற மீன்பிடி நடவடிக்கை தொடர்பான பிரச்சினைகள் தொடர்பாக நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரனிடம் கோரிக்கை விடுத்தனர்.

இதன்போது கருத்து வெளியிட்ட சுமந்திரன், போராட்டங்களின் மூலமாகவே பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முடியும் எனவும் அனைத்தையும் சட்டரீதியாக தீர்த்துக் கொள்ள முடியாது எனவும் தெரிவித்தார்.

## அத்தியாவசியப் பொருள்களின் விலையேற்றத்துக்கு எதிர்ப்பு!







அத்தியாவசியப் பொருள்களின் விலையேற்றத்தைக் கண்டித்தும் வரவு செலவு திட்டத்தின் ஊடாக மக்களுக்கு நிவாரணம் வழங்குமாறு வலியுறுத்தியும் தமிழ் முற்போக்கு கூட்டணியால் நேற்று (ஞாயிற்றுக்கிழமை) போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

பொகவந்தலாவை நகரில் முற்பகல் 10 மணியளவில் ஆரம்பமான இந்தப் போராட்டத்தில் தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோ கணேசன், பிரதித் தலைவர்களான பழனி திகாம்பரம், வீ. இராதாகிருஷ்ணன், நாடாளுமன்ற உறுப்பினர்களான வேலுகுமார், உதயகுமார் ஆகியோர் பங்கேற்றனர்.

அத்துடன் தமிழ் முற்போக்கு கூட்டணியின் முன்னாள் மாகாணசபை உறுப்பினர்கள், உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள், கட்சியின் செயற்பாட்டாளர்கள், பொதுமக்கள் எனப் பலரும் போராட்டத்தில் பங்கேற்று விலையேற்றத்தைக் கண்டித்தனர்.

இந்தப் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்து பொகவந்தலாவை நகரில் உள்ள வர்த்தக நிலையங்கள் நேற்று மூடப்பட்டன.

அத்தியாவசியப் பொருள்களின் விலையை உடனடியாகக் குறைக்கவும், வரவு - செலவுத் திட்டத்தில் நிவாரணம் வேண்டும், பெருந்தோட்டத் தொழிலாளர்களின் ஊதிய உரிமை உறுதிப்படுத்தப்பட வேண்டும், அவர்களின் தொழில் பாதுகாப்பும் உறுதிப்படுத்தப்பட வேண்டும், விவசாயிகளின் வாழ்வாதாரம் பாதிக்காத வகையில் உரம் வழங்க வேண்டும், அதற்கான விசேட பொறிமுறை அவசியம் என கோஷம் எழுப்பியவாறு அவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

## அரசை வீட்டுக்கு அனுப்ப வேண்டும் மனோ கணேசன் எம்.பி. திடசங்கற்பம்



விவசாயத்துறை அமைச்சரின் கொடும்பாவியை மட்டுமல்ல ஒட்டுமொத்த இந்த அரசையுமே கொளுத்தி, வீட்டுக்கு விரட்டியடிக்க வேண்டும் என தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவரும் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் தெரிவித்தார்.

அத்தியாவசியப் பொருள்களின் விலையேற்றத்தைக் கண்டித்து பொகவந்தலாவையில் நேற்று (ஞாயிற்றுக்கிழமை) நடைபெற்ற போராட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறுகையில் -

'கொரோனாவுக்கு மத்தியிலும் இந்தியா, பங்களாதேஷ் போன்ற நாடுகள் இலங்கைக்குக் கடன் கொடுத்தன. அந்நாடுகள் பொருளாதாரத்தை முகாமை செய்யவில்லையா? அப்படியானால் எமது நாட்டு அரசுக்கு மட்டும் ஏன் தடுமாற்றம்?

தேசிய உற்பத்தியில் புரட்சி செய்யப்போகிறேன் என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அறிவித்துள்ளார். மஞ்சளுக்குத் தடை விதிக்கப்பட்டது. நாட்டில் தற்போது மஞ்சள் இருக்கின்றதா? பாசிபயறு, உளுந்து உள்ளிட்ட பொருள்களும் இல்லை. அரசு தோல்வி கண்டுள்ளது.

விவசாய அமைச்சரின் மட்டுமல்ல இராஜாங்க அமைச்சரின் கொடும்பாவியையும் எரிக்க வேண்டும் என்கின்றனர். இவ்விருவரின் மட்டுமல்ல ஒட்டு மொத்த அரசையுமே கொளுத்தி, வீட்டுக்கு அனுப்பவேண்டும்' என அவர் மேலும் தெரிவித்தார்.

# யாழ்.மண்டைதீவு புனித பேதுருவானர் முன்பள்ளி சிறிதரன் எம்.பியால் திறப்பு



யாழ்ப்பாணம், மண்டைதீவு புனித பேதுருவானர் முன்பள்ளியை கடந்த சனிக்கிழமை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்ப்பாணம் கிளிநொச்சி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் திறந்து வைத்தார்.

மண்டைதீவு கடற்றொழிலாளர் சங்கம் மற்றும் புலம்பெயர் உறவுகளின் நிதிப்பங்களிப்பில் இந்த முன்பள்ளிக் கட்டடம் அமைக்கப்பட்டது.

மேற்படி நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன், மண்டைதீவு பங்குத்தந்தை வணபிதா அந்தோனி தாஸ், அருட்சகோதரி மற்றும் வேலணை பிரதேச சபையின் உறுப்பினர்களான சிறீபத்மநாதன், திருமதி தங்கரானி தேவாலயத்தின் நிர்வாகிகள், மண்டைதீவு பங்கு மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

## வடக்கு, கிழக்கு மாகாணங்களில் கண்ணிவெடியகற்றிய ஆயிரம் ஏக்கருக்கும் அதிகளவான காணிகள் விடுவிப்பு

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் கண்ணிவெடியகற்றப்பட்ட 2 ஆயிரத்து 186 ஏக்கர் காணிகள் அவற்றின் உரிமையாளர்களிடம் கையளிக்கப்பட்டுள்ளன.

கிளிநொச்சி, பச்சிலைப்பள்ளி பிரதேச செயலாளர் பிரிவில் கண்ணிவெடியகற்றப்பட்ட காணிகள், கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மற்றும் கிராமிய வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை மற்றும் கட்டடப் பொருள்கள் தொழில் மேம்பாட்டு இராஜாங்க அமைச்சர் இந்திக அனுருத்த ஆகியோரால் அண்மையில் உரிமையாளர்களிடம் கையளிக்கப்பட்டன. 270 குடும்பங்கள் வசிப்பதற்காக இந்தக் காணி விடுவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பிரதேசத்தில் கண்ணிவெடியகற்றும் நடவடிக்கையின் போது 87 ஆயிரத்துக்கும் அதிகமான மிதி வெடிகளும், ஒரு லட்சத்து 96 ஆயிரத்து 985 தோட்டாக்களும் ஆயுதங்களும் மீட்கப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

## பல மில்லியன் ரூபா செலவில் வவுணதீவில் வீதி புனரமைப்பு

### பிள்ளையான் திறந்து வைத்தார்




ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் 'நாட்டை கட்டியெழுப்பும் சுபீட்சத்தின் நோக்கம் கொள்கை பிரகனடத்திற்கு அமைவாக' ஒரு லட்சம் கிலோ மீற்றர் வீதிகளை காப்பெட் இட்டு அபிவிருத்தி செய்யும் திட்டத்தின் கீழ் வேலைகளை பூர்த்தி செய்த 1,500 வீதிகளை ஒரே நாளில் திறந்து மக்கள் உரிமையாக்குதல் செயற்பாடு நேற்று (ஞாயிற்றுக்கிழமை) நாடுபூராகவும் முன்னெடுக்கப்பட்டது.

அதற்கமைவாக மண்முனை மேற்கு வவுணதீவு பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட நரிப்புல்தோட்டம் பள்ளச்சேனை பகுதியில் வீதி பெருந்தெருக்கள் அமைச்சின் கீழ் நாடாளுமன்ற உறுப்பினர் சிவநேசதுரை சந்திரகாந்தனின் சிபாரிசில் அமைக்கப்பட்ட இரண்டு கிலோமீற்றர் நீளமான கொங்கிறிட் வீதி நேற்று மக்கள் பாவனைக்காகத் திறந்து வைக்கப்பட்டது.

4 கோடியே 90 லட்சம் ரூபா செலவில் இந்த வீதி புனரமைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

## நல்லூரில் உள்ள இராசதானி காலத்து தொன்மங்களைப் பாதுகாக்க ஏற்பாடு!

### அமைச்சர் விதுரவிடம் அங்கஜன் கோரிக்கை





யாழ்ப்பாணத்தில் உள்ள இராசதானி காலத்து தொன்மங்களை பாதுகாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என வலியுறுத்தப்பட்டுள்ளது.

இராஜாங்க அமைச்சர் விதுர விக்கிரமநாயக்கவின் யாழ் விஜயத்தின் போது, நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதனால் இந்த விடயம் எடுத்துரைக்கப்பட்டது.

அதன்படி நல்லூர் மந்திரிமனை, சங்கிலியன் சிலை, யமுனா ஏரி உள்ளிட்டவற்றை பாதுகாக்க வேண்டியதன் அவசியத்தை அவர் குறிப்பிட்டார்.

இலங்கையில் நீண்டகாலமாக மக்கள் வாழ்ந்தமைக்கான சான்றுகளை கொண்ட யாழ்ப்பாண மாவட்டம், ஏராளமான தொன்மங்களை கொண்டுள்ளது.

அவற்றைப் பாதுகாப்பது எமது மூதாதையருக்கும், அடுத்துவரும் சந்ததிக்கும் நாம் செய்யும் கடமை என அங்கஜன் இராமநாதன் குறிப்பிட்டார்.

## வர்த்தக மோசடிக் கும்பல்களே எரிவாயு தட்டுப்பாட்டுக்கு காரணம்!

லிற்றோ நிறுவனம் சமையல் எரிவாயு தயாரிப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டுவருவதாக நிறுவனத்தின் தலைவர் தொர ஜயசிங்ஹ தெரிவித்துள்ளார்.

கடந்த சில தினங்களில், எரிவாயு நிரப்பும் செயற்பாடுகள் முறையாக மேற்கொள்ளப்படாதமையாலேயே நெருக்கடி நிலை ஏற்பட்டதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

எரிவாயு சந்தையில் வர்த்தக மோசடிக் குழுவொன்றின் செயற்பாடே இதற்குக் காரணம் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

எரிவாயு இறக்குமதியின் ஏகபோக உரிமையை ஒரு குழு மாத்திரமே வைத்திருக்கிறது.

கடந்த 10 ஆண்டுகளில் வேறு தரப்புகளுக்கு காஸ் இறக்குமதியை மேற்கொள்ள இடமளிக்கப்படவில்லை எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

## முதல்வர் சரவணபவனிடம் பொலிஸார் விசாரணைகள்

மட்டக்களப்பு மாநகரசபையின் முதல்வர் தி.சரவணபவனிடம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர் எனத் தெரியவருகின்றது.

கடந்த 09.09.2021 சத்துருக்கொண்டான் நினைவுத்தூபியில் விளக்கேற்றி அஞ்சலி செலுத்தப்பட்டமை தொடர்பில் இந்த விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டன என மாநகரசபை முதல்வர் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாநகரசபைக்குட்பட்ட சத்துருக்கொண்டான் மற்றும் அதனை அண்டிய பகுதிகளிலிருந்து இராணுவத்தினராலும் ஊர்காவல் படையினராலும் கொண்டுசெல்லப்பட்டு படுகொலை செய்யப்பட்ட 186பேரின் நினைவாக சத்துருக்கொண்டானில் அமைக்கப்பட்டுள்ள நினைவுத்தூபியில் தான் அஞ்சலி செலுத்தினேன் எனவும் சிறு பிள்ளைகள், கர்ப்பிணிப் பெண்கள் உட்பட 186 பேரின் நினைவாகவே இந்த நினைவுத்தூபியுள்ளதாகவும் அதனால் வருடாந்தம் அதில் அஞ்சலி செய்கிறோம் எனவும் பொலிஸாரிடம் தெரிவித்தனர் எனவும் அவர் தெரிவித்தார்.

குறித்த படுகொலை தொடர்பில் யார் கொலையாளிகள் என்று சாட்சியங்கள் கூட பதிவுசெய்யப்பட்ட நிலையில் அது தொடர்பில் எந்த விசாரணைகளையும் முன்னெடுக்காத பொலிஸார் குறித்த நினைவுத்தூபியில் அஞ்சலி செலுத்தியமைக்காக விசாரணை செய்கின்றனர் எனவும் தெரிவித்த முதல்வர் இது தொடர்பான தனது அதிருப்தியை பொலிஸாரிடம் தெரிவித்துள்ளார் எனவும் குறிப்பிடப்படுகின்றது.

**கந்தசஷ்டி சிறப்புப் பிரார்த்தனை**

## மூவிரண்டு முகமுடையாய் முழுவருளைத் தந்திடையா!



**ஆராத காதலுடன் ஐயாவுனை வேண்டுகிறோம்
அனுதினமும் திருப்புகழைப் பாடியே பரவுகிறோம்
நேரான வழிசெல்ல நீயெமக்கு வழிசமைப்பாய்
தாரள குணமுடைய தமிழ்க்குமரா தயையுரிவாய்!**

**ஈராறு கரமுடையாய் எங்களது வேலவனே
கூராக வரும்வினையை வேலாலே அழித்துவிடு
தீராத காதலுடன் சஷ்டிதினம் நோற்கின்றோம்
மூவிரண்டு முகமுடையாய் முழுவருளைத் தந்திடையா!**

**குன்றிருக்கும் இடமெல்லாம் குமராநீ அமர்ந்திட்டாய்
கொன்றொழிக்கும் குணமுடையார் கூட்டமாய் பெருகுகிறார்
வன்முறையை அவர்மறக்க வழிகாட்டு திருக்குமரா
உன்னடியே சரணமையா உமைபாலா உதவிடையா!**

**- மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா -
(மேனாள் தமிழ்மொழிக் கல்வி இயக்குநர், மெல்பேண், ஆஸ்திரேலியா)**




# மெய்நிகர் வகுப்பறை

## Online Classroom

**ஜனனீ தேவானந்த்**
(முதுநிலை விரிவுரையாளர் -
(தகவல் தொழில்நுட்பம்),
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)

### கூகிள் பக்க அனுபவம் (Google Page Experience)

கொவிட் பெருந் தொற்றின் காரணமாக மெய்நிகர் வகுப்பறைகளும் கலப்பு கற்றல் முறைகளும் அதிகளவில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. இதற்கு துணையாக தேடுபொறிகளும் இணைய தரவுத்தளங்களும் உதவிபுரிந்து வருகின்றன. கல்வி கற்பவர் தமக்குத் தேவையானவற்றை தேடுதல் தளம் மூலமாகப் பெற்றுக் கொள்கின்றனர். உலகளவில் கூகுள் தேடுதல் மூலமாக இணையத்தளத்துக்குச் செல்பவர்கள் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. சமூக ஊடகங்கள் மூலமாகச் செல்பவர்களை விடக் கூகுள் தேடுதல் மூலமாகச் செல்பவர்கள் அதிகம் எனலாம்.

தற்போதைய மெய்நிகர் கற்றல் கணினி வழியாக மட்டும் நடப்பதல்ல, மாறாக மெய்நிகர் கற்றலுக்கான முக்கிய சாதனமாக சிமாட் கைத்தொலைபேசி விளங்குகின்றது. மெய்நிகர் வழி கற்பவர்களின் எண்ணிக்கையில் கணனி வழி கற்பவர்களின் எண்ணிக்கையைவிட கைத்தொலைபேசி (Smart Phone) வழியாகப் கற்பவர்களின் எண்ணிக்கை அதிகரித்து விட்டது என புள்ளிவிவரங்கள் கூறுகின்றன. உலகளவில் 'தேடுதல் தள சந்தைப் போட்டியில்' 92% (2021) கூகுள் வைத்துள்ளது என்பதை தரவுகள் புலப்படுத்துகின்றன. எனவே, கூகுள் ஒரு மாற்றத்தைச் செய்கிறது என்றால், உலகளவில் அதன் தாக்கத்தினை உணரக்கூடியதாக இருக்கும். குறிப்பாக மெய்நிகர் கற்றலிலும் அந்தத் தாக்கத்தை உணரலாம்.

குருகுல கல்வியில் தொடங்கிய பாரம்பரியக் கல்வி தற்போது கைத்தொலைபேசி வரை சென்றுள்ளது. கைத்தொலைபேசியில் படிப்பவர்கள் ஒரு இணைப்பை (Link) கிளிக் செய்து அது 3 நொடிகளில் திறக்கவில்லை என்றால், புறக்கணித்து விட்டு சென்றுவிடு




கிறார்கள் என்று ஆய்வுகள் கூறுகின்றன. ஒருவரின் பொறுமை அவ்வளவு தூரம் தற்போது மாறி இருக்கிறது. எனவே, காத்திருப்பதில் பொறுமை குறைந்தவர்களைப் படிக்க வைக்க என்ன வழி என்பதை பெற்றோர், ஆசிரியர்கள் மட்டுமல்ல கூகுள் தளமும் சிந்தித்து செயற்பட்டுள்ளது.

வேகமாக செய்தியினைக் கொடுப்பதற்காகவும் கைத்தொலைபேசியில் படிப்பவர்களைக் கவர்வதற்காகவும் கூகுள் AMP (Accelerated Mobile Pages) எனும் தொழில் நுட்பத்தினை அறிமுகம் செய்துள்ளது. ஒரு மின்னல் குறியீடுடன் இருக்கும் "Instant Article"யினைப்பார்த்து இருக்கின்றோம். வழக்கமான சுட்டியைத் திறப்பதற்கும் இந்த "Instant Article" களை கிளிக் செய்து திறப்பதற்கும் மிகப் பெரிய வேக வித்தியாசமுள்ளது.

AMP வசதி செயல்படுத்தப்பட்ட தளங்களின் அனைத்துக் கட்டுரைகளையும் கூகுள் தன் வழங்கியில் வைத்து இருக்கும், இதனால் மிக வேகமாக தேடலை செயற்படுத்த முடியும்.

இவ்வாறான பல பயன்பாடுகள் இருந்த போதிலும் AMP சில கட்டுப்பாடுகளையும் கொண்டிருப்பதினால் AMP யினை விட தற்போது அறிமுகமாகியுள்ள புதிய தொழில்நுட்பமான Google Page Experience பெறுகின்றது.



இணையத் தரத்தை மேம்படுத்தவும், பயனாளர்களுக்கு சிறப்பான அனுபவத்தைக் கொடுக்கவும், தனது Algorithm ல் சீரான இடைவெளியில் மாற்றங்களைச் செய்து கொண்டு வருகிறது.

கூகுள் செய்த மாற்றத்தையொட்டி இணையதளத்தை நடத்துபவர்கள், அதற்கேற்ப தங்களின் தளத்தில் மாற்றங்களை செய்கின்றார்கள்.

இந்த புதுப்பிப்பில் சரியாக என்ன நடக்கிறது என்பதைப் பார்க்கலாம்,


மொபைல் நட்பு, பாதுகாப்பான உலாவல், HTTPS பாதுகாப்பு மற்றும் ஊடுருவும் இடைநிலை வழிகாட்டுதல்கள் போன்ற வலைத்தளங்களை தரவரிசைப் படுத்துவதில் உதவ, பயனர் அனுபவத்தின் சில அம்சங்களை கூகுள் ஏற்கனவே பயன்படுத்துகிறது. தளங்களின் தரத்துக்கு ஏற்ற மதிப்பெண் வழங்கும் Page Experience முறையைக் கூகுள் கொண்டு வந்துள்ளது. ஒரு தளம் எவ்வளவு வேகமாக உள்ளது? படிக்க எப்படியுள்ளது? பாதுகாப்பானதாக உள்ளதா? (https) திறக்கும்போது நகராமல் உள்ளதா? அதாவது இணையத் தளத்தைத் திறந்து ஒரு இணைப்பை (Link) கிளிக் செய்யும்போது அது நகர்ந்து விட வேறொன்றை தவறுதலாக கிளிக் செய்வது நடைபெறாமல் உள்ளதா? என்பன போன்றவற்றை வரையறையாகக் கொண்டு வந்துள்ளது. அதே வேளை, இவற்றை முறைப்படுத்தக் கட்டுப்பாடுகளைக் கொண்டு வந்துள்ளது.

இந்த சேவையின் ஜூன் 2021 புதுப்பித்தலுடன், இணையதளங்களுக்கான பக்க அனுபவத்தை மதிப்பிடும் மூன்று புதிய அளவீடுகளை கூகுள் அறிமுகப்படுத்துகிறது. கோர் வெப் வைட்டல்ஸ் எனப்படும் இந்த அளவீடுகள், கூகுள் பயனர் அனுபவ அறிக்கையால் திரட்டப்பட்ட தரவை அடிப்படையாகக் கொண்டவை, அதாவது உண்மையான பயனர் அனுபவங்கள் இந்த அளவீடுகளை நிர்வகிக்கின்றன.

இனி மேற்குறிப்பிட்ட விதிமுறைகளைப் பின்பற்றி அதிக மதிப்பெண்கள் பெறும் தளங்கள் மட்டுமே கூகுள் பரிந்துரையில் முன்னணியில் இருக்கும். மொபைல் பயன்பாடு அதிகரித்து வருவதால், இதையொட்டியே கூகுள் தேடுதல் வடிவமைப்புகளும், மாற்றங்களும் இனி இருக்கும்.

Page Experience குறியீடு உள்ள சுட்டியைத் திறந்தால் சிறந்த இணைய அனுபவத்தைக் அது எதிர்காலத்தில் கொடுக்கும் என்கிறார்கள்.



## மக்களின் பொறுப்பற்ற நடவடிக்கையால்

# தொற்றாளர் அதிகரிப்பு; மீண்டும் பயணத் தடை?

## எச்சரிக்கின்றது சுகாதாரத் தரப்பு

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றாளர்களின் எண்ணிக்கை மீண்டும் அதிகரிக்கும் நிலைமை ஏற்பட்டுள்ளது எனச் சுகாதாரத் தரப்பினர் தெரிவித்துள்ளனர்.

கடந்த சில வாரங்களாக நாளாந்தம் 500 தொடக்கம் 600 வரையான கொரோனாத் தொற்றாளர்களே அடையாளம் காணப்பட்டு வந்த நிலையில், கடந்த இரண்டு நாள்களாக அந்த எண்ணிக்கை 600 ஐக் கடந்துள்ளது எனச் சுகாதார அதிகாரிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இந்நிலையில், தொற்றாளர்களின் எண்ணிக்கையில் உயர்வு ஏற்படுமாக இருந்தால் மீண்டும் பயணக் கட்டுப்பாட்டை அமுல்படுத்த வேண்டிய நிலைமை ஏற்படும் என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விசேட வைத்திய நிபுணர் அசேல குணவர்தன தெரிவித்துள்ளார்.

பயணக் கட்டுப்பாட்டை தளர்த்திய பின்னர்



மக்கள் பொறுப்பற்ற வகையில் நடந்துகொள்கின்றனர் எனவும், இதனால் தொற்று நிலைமை மீண்டும்அதிகரிக்கும்நிலைமைஉருவாகியுள்ளது எனவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.



# விடத்தல் தீவுக்குள் புகுந்தது கடல் நீர்!

## 3 கிராமங்களைச் சேர்ந்த மக்கள் பாதிப்பு

**(ந.லோகதயாளன்)**

மன்னார் மாவட்டத்தில் நிலவும் தொடர் மழையுடன் கூடிய காலநிலை காரணமாக மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள விடத்தல் தீவு பிரதேசத்துக்குள் கடல் நீர் புகுந்துள்ளது.

இதனால் விடத்தல் தீவு பிரதேசத்தில் மூன்று கிராம அலுவலர் பிரிவுகளில் உள்ள மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறு பாதிக்கப்பட்டுள்ள மக்கள் தமது வீடுகளை விட்டு வெளியேறி உறவினர்கள் மற்றும் நண்பர்களின் வீடுகளில் தங்கியுள்ளனர்.

இதேவேளை, விடத்தல் தீவில் மீனவர்களின் படகுகள் சில சேதமடைந்துள்ளன எனவும் மீனவர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்த நிலையில், நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், விடத்தல் தீவு பிரதேசத்துக்குச் சென்று நிலைமையை அவதானித்ததோடு, பாதிக்கப்பட்ட மக்களையும் சந்தித்தார்.

மேலும், உரிய அதிகாரிகளுடன் தொடர்புகொண்டு வினவியதோடு, உரிய கிராம அலுவலரைச் சந்தித்து பாதிப்பு தொடர்பாகவும் அறிந்துகொண்டார்.

பாதிக்கப்பட்ட மீனவர்களை அவர் சந்தித்துக் கலந்துரையாடினார்.

# 8 மாவட்டங்களுக்கு மண்சரிவு அபாயம்

*இலங்கையில் நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக 8 மாவட்டங்களுக்கு மண் சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது என அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் அறிவித்துள்ளது.*

*பதுளை, இரத்தினபுரி, மாத்தளை, கேகாலை, கண்டி, குரு நாகல், காலி மற்றும் களுத்துறை ஆகிய மாவட்டங்களுக்கே மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது எனவும் அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் மேலும் தெரிவித்துள்ளது.*

# தப்பிச் சென்ற கைதிகள் மடக்கிப்பிடிப்பு!

வெலிக்கடை சிறைச்சாலையிலிருந்துகந்தக்காடுபுனர்வாழ்வு மத்தியநிலையத்துக்குஅழைத்துச் செல்லப்பட்ட இரு கைதிகள், பொல்கஹவல மெத்தலந்த பிரதேசத்தில் வைத்து சிறைச்சாலை பஸ்ஸிலிருந்து தப்பிச் சென்று மலசலகூடமொன்றில் மறைந்திருந்த நிலையில் பொல்கஹவல பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

சிறைக்கைதிகளை அழைத்துக்கொண்டு மூன்று பஸ்கள் சென்றுள்ளநிலையில், கொழும்பு – குருநாகல் பிரதான வீதி, பொல்கஹவெல மெத்தலந்த பிரசேத்தில் வைத்து ஒரு பஸ்ஸில் இருந்த கைதிகள், பஸ்ஸுக்குள் கலகம் விளைவித்துள்ளனர்.

இதையடுத்து சிறைச்சாலை அதிகாரிகள் பஸ்ஸைத் திறந்து பார்க்க முற்பட்டபோதே, கைதிகள் பஸ்ஸிலிருந்து தப்பிச் செல்ல முயற்சித்துள்ளனர். இதன்போது இரு கைதிகள் கைவிலங்குகளுடன் தப்பிச் சென்றுள்ளனர்.

குறித்த இருவரும் கொஸ்கலே பிரதேச சபைக்குட்பட்ட தகன சாலையின் மலசலகூடத்தில் மறைந்திருந்த நிலையிலேயே கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸ் அதிகாரிகளும் சிறைச்சாலை அதிகாரிகளும் இணைந்து இரண்டு மணித்தியாலங்கள் மேற்கொண்ட சோதனை நடவடிக்கையையடுத்து கைதிகள் இருவரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இது தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## இளம் குடும்பஸ்தர் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முள்ளிப்பொத்தானையைச் சேர்ந்த இளம் குடும்பஸ்தரான ஹமீட் முபீட் (வயது 21) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

குறித்த நபர் ரயில் வீதியில் நின்று கொண்டு தொலைபேசியில் உரையாடியதன் காரணமாக ரயிலுடன் மோதுண்டிருக்கலாம் என்று ஆரம்பகட்ட விசாரணையின்போது தெரிய வந்துள்ளது.

உயிரிழந்த நபரின் சடலம் கந்தளாய் வைத்தியசாலையில் பிரேத பரிசோதனைக்காக ஒப்படைக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளைத் தம்பலகாமம் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.

## வலயக் கல்வி .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாடுதழுவிய அதிபர் – ஆசிரியர்களின் தொழிற்சங்கப் போராட்டம் தற்சமயம் வடிவம் மாற்றப்பட்டு புதிய வடிவங்களில் நடைபெற்று வருகின்றன.

அந்தவகையில் வரவு – செலவுத் திட்டத்துக்கு முன்னர் எமது பிரச்சினைக்குத் தீர்வு வழங்க அரசை வலியுறுத்தும் வகையில் நாளை செவ்வாய்க்கிழமை நாடு தழுவிய ரீதியில் வலயக்கல்வி அலுவலகங்களுக்கு முன்னால் பெரும் போராட்டங்களை நடத்தத் திட்டமிட்டுள்ளோம் என்று இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்தார்.

அதற்கமைய சகல வலயக் கல்வி அலுவலகங்கள் முன்பாகவும் நாளை பிற்பகல் 2 மணியளவில் போராட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன என்றும் அவர் மேலும் கூறினார்.

## திடீர் வேலை நிறுத்தப் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்நிலையில், அவர்கள் திடீர் வேலைநிறுத்தத்திற்கு செல்லவுள்ளனர் என்று தற்போது தகவல்கள் வெளியாகியுள்ளன.

எவ்வாறாயினும், முன்னறிவித்தல் இன்றி பணிப்புறக் கணிப்பில் ஈடுபடும் திட்டம் இல்லை என்று ஐக்கிய தொழிற்சங்கக் கூட்டமைப்பின் ஏற்பட்டாளர் ரஞ்சன் ஜயலால் தெரிவித்துள்ளார்.

இவ்வாறான வேலைநிறுத்தம் இடம்பெற்றால், நாட்டு மக்கள் கடும் அசௌகரியங்களுக்கு உள்ளாவார்கள் எனவும், இதனால் இதற்கு அரசு உரிய பதிலை வழங்க வேண்டும் எனவும் அவர் மேலும் கூறியுள்ளார்.




# பொலிஸ் நிலையம் ஒன்றில் 10 அதிகாரிகளுக்குத் தொற்று

மொனராகலை மாவட்டத்தின் படல்கும்புர பொலிஸ் நிலையத்தில் சேவையாற்றும் 10 பொலிஸ் அதிகாரிகளுக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது எனக் குடாஓயா மேலதிக பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி டபிள்யூ.எம். தனபால தெரிவித்துள்ளார்.

தொற்றுக்குள்ளான அதிகாரிகளில் பொலிஸ் கான்ஸ்டபிள் உள்ளிட்ட அதிகாரிகளும் உள்ளனர் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

10 பொலிஸ் அதிகாரிகளும் வீடுகளிலேயே தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர் எனவும் குடாஓயா மேலதிக பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி மேலும் தெரிவித்துள்ளார்.

# சிறுவர் இல்லத்தில் 32 பேருக்குக் கொரோனா



*பதுளை, பண்டாரவளையிலுள்ள சிறுவர் இல்லமொன்றில் ஐந்து வயதுக்குக் குறைந்த 27 பேர் உள்ளிட்ட 32 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது எனப் பண்டாரவளை பொதுச் சுகாதாரப் பரிசோதகர் டீ.எம்.ஆர். திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.*

*குறித்த சிறுவர் நிலையத்தில் சிறுவர்களைப் பராமரிக்கும் ஊழியர்கள் மற்றும் சிறுவர்கள் உள்ளடங்கலாக 52 பேருக்கு மேற்கொள்ளப்பட்ட அன்டிஜன் பரிசோதனையிலேயே 32 பேருக்குக் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.*

*தொற்றுக்குள்ளான 32 பேரும் வைத்தியர்களின் மேற்பார்வையின் கீழ், சிறுவர் இல்லத்திலேயே தனிமைப்படுத்தப்பட்டு சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றனர்.*

# வடமாகாண மரநடுகை மாதம்

## கார்த்திகை 01 - 30, 2021




**கார்த்திகை மாதத்தில் காந்தளின் துளிர்ப்பைப் போல
நம்பிக்கையின் விதைப்பாக மரங்களை நாட்டுவோம்**

## தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம்